**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 -ம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, ஸ்ரீ சோபகிருது வருடம், தை மாதம் 20 - ம் நாள்**
**இ.ம.எண். 12/2023 இன் மு.வ.எண். 221/2019**

இந்திரா ... மனுதாரர் / வாதி

... எதிர் ...

ஜெயஹக்சர் ....எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என்முன்பு 11.01.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.எம்.குருதாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.பி.ஜெயக்குமார், திரு.வி.சிதம்பரம், திரு.ஏ.பாலமுருகன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

கடந்த 16.10.2023ம் தேதி மேல்நடத்தவில்லை என தவறுதலாக மேற்குறிப்பு செய்யப்பட்டதால் தள்ளுபடியான இ.ம.எண்.4/2022 ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதி கோரி உ.ந.மு.ச பிரிவு 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதாரர்தரப்பில் உ.ந.மு.ச கட்டளை 12 விதி 14 மற்றும் கட்டளை 11 விதி 6 ன் கீழ் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 26.04.2022 ம் தேதியிட்டு அனுமதியாகியுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் சீராய்வு மனு தாக்கல் செய்து, அதன்படி அசல்மனு 04.01.2023 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், இளம்வழக்கறிஞர் தவறுதலாக மனுவை மேல்நடவடிக்கை தேவையில்லை என மேற்குறிப்பு செய்துவிட்டார். மாண்பமை உயர்நீதிமன்றம் அசல்ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்த நிலையில் இளம் வழக்கறிஞர் தவறுதலாக வழக்கை புரிந்து கொள்ளாமல் மனுவின் தேவை முடிந்துவிட்டதாகக் கருதி தவறுதலாக மனுவை மேல்நடவடிக்கை தேவையில்லை என மேற்குறிப்பு செய்துவிட்டார். மனுதாரருக்கு இது பெரிய இழப்பை ஏற்படுத்தும். எனவே கடந்த 16.10.2023ம் தேதி மேல்நடத்தவில்லை என தவறுதலாக மேற்குறிப்பு செய்யப்பட்டதால் தள்ளுபடியான இ.ம.எண்.4/2022 ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:**

மனுவில் கூறியுள்ள விசயங்கள் மறுக்கப்படுகிறது. உண்மையில் கடந்த 16.10.2023ம் தேதி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் இளம் வழக்கறிஞர் ஆஜராகி மூத்த வழக்கறிஞர் ஒப்புதலோடு வாபஸ் பெற்றுவிட்டு தற்போது தவறுதலாக மேற்குறிப்பு செய்ததாகக் கூறுவது

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.03 17:16:43 +0530

ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தவறுதலான மேற்குறிப்பு என்று கூறி கோப்பிற்கு எடுக்கக் கோர இயலாது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்ய அனுமதியளித்து அதன்பேரில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்தபின்பு இம்மனு அனுமதிக்க தேவையில்லை. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்னவென்றால் மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 16.10.2023ம் தேதி மேல்நடத்தவில்லை என தவறுதலாக மேற்குறிப்பு செய்யப்பட்டதால் தள்ளுபடியான இ.ம.எண்.4/2022 ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்ய அனுமதியளித்து அதன்பேரில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்தபின்பு இம்மனு அனுமதிக்க தேவையில்லை என்றும் தவறுதலாக மேற்குறிப்பு செய்யப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் கூறி வாதிடப்பட்டது. மனுதாரர்தரப்பில் மாண்பமை கேரள உயர்நீதிமன்ற " Chandrasekharan Vs Jose and 8 others " என்ற சி.ஆர்.பி.எண்.766/2008 ல் 19.11.2008 ம் தேதிய தீர்ப்பை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.

**5.** மேற்படி மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பில் ," The court below has also relied on the decision of the Apex Court in Jet Ply Wood (P) ltd. v. Madhukar Nowlakha (2006 (2) KLT 624 SC) which held that a petition for recalling an order permitting withdrawal of a suit can be filed invoking the inherent jurisdiction of Civil Court under Section 151 of the C.P.C. The trial court on a consideration of the contention has found that it is a fit case where allowing I.A.1528/08 the dismissal order has to be set aside and the suit has to be restored to file." என்று கூறப்பட்டுள்ளது. எனவே மேற்படி மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பின் சங்கதிகளான தவறுதலாக மேற்குறிப்பு செய்திருப்பதை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி உத்தரவை ரத்து செய்யலாம் என்பது இவ்வழக்கின் சூழ்நிலைகளுக்கு பொருந்தும் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 -ம் நாள் சனிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.03 17:16:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.03 17:17:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.